கொண்டு வருகிறேன். சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்காக சமூகப் புரட்சியைச் செய்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றையமுன்தினம் சிறுபான்மை மக்களுடைய உணர்வுகளை, உரிமைகளைக் காப்பாற்றுகிற வகையிலே மதம் மாறிய வன்னிய கிறிஸ்தவர்களுக்கு அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குரிய அனைத்து சலுகைகளையும் பெறுவார்கள் என்று அறிவித்தார்கள். அவர்கள் யாருடைய ஊதுகுழலாகவோ மாறிவிட்டார்கள் என்று சொன்னவர்களுக்கு சரியான பதிலைச் சொல்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எவரும் செய்யமுடியாத அளவுக்கு சிறுபான்மை மக்களுடைய உரிமைகளை, உணர்வுகளை அவர்கள் இங்கே வெளிப்படுத்துகிற வகையிலே மிகப் பெரிய புரட்சியை அன்றைக்குச் செய்தார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் மதம்மாறிய தாழ்த்தப்பட்ட கிருஸ்தவர்களுக்கும், அதே தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய சலுகைகளை வழங்கவேண்டுமென்று நீண்டகாலமாகக் கோரி வருகிறார்கள். மத்திய அரசு இதைச் செய்திட வேண்டும். ஆனால் மத்திய அரசு இதைச் செய்திட முன்வராமலேயே இருக்கிறது. ஆகவே மாநில அரசு இதை வற்புறுத்துமா நம்முடைய இந்த சட்டப் பேரவையிலேயே இதை வலியுறுத்துமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. ஷெட்யூல்டு காஸ்ட்ஆக அறிவிக்க வேண்டுமென்று சொன்னால் அதை மத்திய அரசாங்கம்தான் செய்யவேண்டும். ஏற்கெனவே நான் இங்கிருந்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். எனவே மத்திய அரசுதான் விரைந்து இதில் முடிவெடுக்கவேண்டும். மத்திய அரசை மீண்டும் வற்புறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

6. உரிமைப் பிரச்சினை.

பேரவை நடவடிக்கை பற்றி உள்நோக்கம் கற்பித்து தொலைக் காட்சி ஒளிபரப்பிய செய்தி குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உரிமை மீறல் பிரச்சினை பற்றிய தீர்ப்பு.

1993 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

30—3—1993 அன்று தொலைக்காட்சிச் செய்தியில் சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றி உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் செய்தி ஒளிபரப்பப்பட்டதை அவை உரிமை மீறல் பிரச்சினை என்று சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எக்ஸ். இராஜமன்னார் 31—3—1993 அன்று கொடுத்த அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய அறிவிப்பினைத் தொடர்ந்து, பேரவையில் அன்று நான் பின்வருமாறு அறிவித்திருந்தேன் :—

'' எந்த அடிப்படையில் அப்படி செய்திகளைச் சொன்னார்கள் என்பது குறித்து தொலைக்காட்சியினரிடம் விளக்கம் கேட்க உள்ளேன். அவ்வாறு தெரிவித்திருப்பது பேரவைக்குக் களங்கம் உண்டாக்கும் செயல் என்றே கருதுகிறேன். மேலெழுந்தவாரியாகப் பார்க்கிற போதே, இது உரிமை மீறல் பிரச்சினைதான் என்றாலும், தொலைக்காட்சி நிலையத்தாரிடம் இதைத் தெரிவித்து அவர்களிடம் விளக்கம் கேட்டு, பின்னர் எனது முடிவை அவையில் தெரிவிக்கிறேன்'' என்று தெரிவித்திருந்தேன்.

இதுகுறித்து தொலைக்காட்சி நிலைய இயக்குநருக்கு 31—3—1993 அன்று ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநர் தனது 12—4—1993 ஆம் தேதியிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிபிட்டுள்ளார் :—

"The comments offered by the News Editor is reproduced below.

We had included the report in question on the basis of our Reporter's copy as well as on Agency despatches. There was no motive as mentioned in the Hon. Speakers communication. If, however, any inference of distortion has been drawn, we assure you that it was not so intentioned. Our endeavour has always been to present the news, especially, those relating to the Legislative Assembly, in a fair manner and we assure you that we would continue to do so in future." தொலைக்காட்சி நிலையத்தார் அளித்துள்ள இவ்விளக்கம் ஏற்புடையதாக இல்லை என்பதை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிற போதே தெரிவித்துக் கொள்கிறேன். பேரவைச் செய்திகளை மக்களுக்குப் பேரவை விதிமுறைகளுக்குட்பட்டு, நடந்தனவற்றையே செய்தியாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ள தொலைக்காட்சி நிறுவனத்தினர் அவர்கள் மனம்போன போக்கில் அவர்களுடைய எண்ணங்களுக்கேற்ப சேர்த்தும் குறைத்தும் திரித்தும் செய்தியாகத் தெரிவிப்பது தவறான செயல் என்பதைச் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது.

பிற்பகல் 12–05

தொலைக்காட்சி நிறுவனத்தினர் தெரிவித்துள்ளவாறு பேரவைச் செய்திகளை in a fair manner வெளியிடுவதாக உறுதி அளித்துள்ளபடி நடக்காததை, இப்பேரவைக்கு வருத்தத்துடன் சுட்டிக்காட்ட

வேண்டியுள்ளது. 'If, however, any inference of distortion is drawn, என்று சொல்லிவிட்டு, இப்பிரச்சினையில் அவ்வாறு செய்தியை சிதைத்து வெளியிடப்பட்டுள்ளது பற்றி நான் குறிப்பிட்டு இருந்ததும், அதற்காகத் தங்கள் குறைந்தபட்ச வருத்தத்தைக்கூடத் தெரிவிக்காததை இப்பேரவையின் இறையாண்மையைப் பொருட்படுத்தாத செயலாகவே கருத வேண்டியுள்ளது. இருப்பினும் தொலைக்காட்சி நிறுவன அலுவலர்கள் வேறுவித நிர்பந்தங்கள் காரணமாகவும் இவ்விதம் நடந்து கொள்ளும் நிலை இருப்பதும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஊர்ஜிதமாகியுள்ளது.

எனவே, இப்பிரச்சினையில் தொலைக்காட்சி நிறுவனத்தினர் அவர்கள் அம்பு தான், எய்தவர்களை விட்டு விட்டு அம்பை நொந்து பயன் என்ன என்ற பெருந்தன்மைக்கேற்ப தொலைக்காட்சி நிறுவனத்தினர் மீது சற்று பெருந்தன்மை காட்டி, இனி வரும் நாட்களிலாவது அவையின் உரிமையைப் பாதிக்கும் அளவுக்குச் செய்திகளை வெளியிடலாகாது என்ற அறிவுரையை ஏற்று நடப்பார்கள், தங்களுடைய அஷ்யூரன்சை, அவர்களுடைய விளக்கத்திலேயே தெரிவித்து இருக்கிற, அந்த அஷ்யூரன்சை காப்பாற்றுவார்கள் என்று கருதி, நடந்த சம்பவத்திற்கு கடும் எச்சரிக்கையினை severe warning-ஐச் செய்து, இத்துடன் இப்பிரச்சினையை விட்டு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

7. கவன ஈர்ப்பு.

(அ) செங்கம் தொகுதி கல்லாத்தூர் கிராமத்தில் மலைவாழ் மக்களின் வீடுகள் தீயினால் பாதிக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் பெ. வீரபாண்டியன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் வீரபாண்டியன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கம் தொகுதி கல்லாத்தூர் கிராமத்தில் மலைவாழ் மக்களின் வீடுகள் தீயினால் பாதிக்கப்பட்டது குறித்த. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.